# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),**

******

**முறையீட்டு மனு எண்: 238/2017/ந**
**ஆணை நாள்: 8–01–2019**

**8.12.2017 நாளிட்ட ஹிந்து**
**நாளிதழ் செய்தி** --- **முறையீட்டு மனுதாரர்**

**நகராட்சி ஆணையர்,**
**ஆவடி நகராட்சி,**
**ஆவடி.** --- **எதிர் மனுதாரர்**

திருவள்ளூர் மாவட்டம், ஆவடி நகராட்சிக்குட்பட்ட ஜீவா நகர் மற்றும் சங்கர் நகர் பகுதிகளில் உள்ள சாலைகளின் நிலைமையினைக் குறிப்பிட்டு 'Residents complain about unusable roads in Avadi' என்று தலைப்பிட்டு 8.12.2017 நாளிட்ட ஹிந்து ஆங்கில நாளிதழில் செய்தி வெளியாகியிருந்தது. மேற்குறிப்பிட்ட செய்தியினை, இம்முறைமன்ற நடுவம் தாமாகவே முறையீட்டு மனுவாக ஏற்று, 238/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்தது. இது சம்பந்தமாக நகராட்சி ஆணையரின் அறிக்கை பெறப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை:**

திருவள்ளூர் மாவட்டம், ஆவடி நகராட்சிக்குட்பட்ட ஜீவா நகர் மற்றும் சங்கர் நகர் பகுதிகளில் உள்ள பெரும்பாலான சாலைகள் சீர்கெட்டுள்ளது குறித்து ஹிந்து ஆங்கில நாளிதழ் செய்தி வெளியிட்டிருந்தது. மேற்குறிப்பிட்ட நாளிதழ் செய்தியில், அப்பகுதி சாலைகளின் நிலைமை குறித்து தெரிவிக்கப்பட்டிருந்த விவரம் வருமாறு:-

(1) ஜீவா நகர் மற்றும் சங்கர் நகர் பகுதிகளில் உள்ள மண் சாலைகள் வாகனப் போக்குவரத்திற்கு உகந்ததாக இல்லை;

(2) பிரதான சாலை நல்ல நிலையில் அமைக்கப்பட்டிருந்தும், பக்க சாலைகள் பழுதடைந்துள்ள நிலை;

(3) சாலைகளில் குடியிருப்புகளின் கழிவு நீரை வழிந்தோடச் செய்வது;

(4) சில குடியிருப்புகளின் கழிவு நீரை விதிகளுக்குப் புறம்பாக நகராட்சி கழிவு நீர் இணைப்பில் கலக்கச் செய்வது;

2. மேற்குறிப்பிட்ட நாளிதழ் செய்திகள் குறித்து நகராட்சி ஆணையரின் அறிக்கை பெறப்பட்டது. ஆவடி நகராட்சியின் ஜீவா நகர் பகுதியில் உள்ள பிரதான சாலை ஒன்றிலும் இரண்டு குறுக்குச் சாலைகளிலும் பொது மற்றும் சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் சிமெண்ட் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன என்றும், மேலும் ஒரு குறுக்குச் சாலையில் ரூ.28 லட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் சாலை அமைக்க ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டுள்ளதென்றும் ஆணையர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். சங்கர் நகர் பகுதியில் உள்ள ஒரு பிரதான சாலையும், எட்டு குறுக்குச் சாலைகளும் 2016-17ஆம் ஆண்டின் பொது நிதியில் ரூ.30 லட்சம் மதிப்பீட்டில் சாலைகள் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளதென்றும் தெரிவித்துள்ளார். மேலும், பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகளும் மேற்கொள்ளப் பட்டுள்ளதென்றும், 2019 ஆம் ஆண்டு மார்ச் திங்களுக்குள் முடிவடைந்துவிடும் என்றும் தெரிவித்துள்ளார்.

3. ஆவடி நகராட்சிக்குட்பட்ட ஜீவா நகர் மற்றும் சங்கர் நகர் பகுதிகளில் உள்ள சாலைகள் சீரமைக்கப்பட்டுள்ள நிலையிலும், பாதாளச் சாக்கடை திட்டப்பணிகள் தற்பொழுது நடைபெற்று வரும் நிலையிலும் இந்நேர்வின் மீதான நடவடிக்கையை இந்நிலையிலேயே முடித்துக் கொள்ள முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2019-ஆம் ஆண்டு, ஜனவரி திங்கள் 8-ஆம் நாளன்று என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்
நகராட்சி ஆணையர்,
ஆவடி நகராட்சி,
ஆவடி, சென்னை – 54.

நகல்
முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு 3
இ. கோ. / உதரி